செ.வெ.எண்: 42 நாள்:30.07.2020

## கரூர் மாவட்டம்

## ஊரகப்பகுதிகளில் 57 மருத்துவக்குழுக்கள் மூலம் தினந்தோறும் “கொரோனா தடுப்பு மற்றும் விழிப்பணர்வு” குறித்த சிறப்பு மருத்துவமுகாம்கள் நடத்தப்படுகின்றது - வாங்கல் குப்புச்சிப்பாளையத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்ட பின் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இஆப., அவர்கள் தகவல்

அதன் விவரம் வருமாறு:

கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாங்கல் குப்புச்சிப்பாளையம் ஊராட்சியில் நடைபெற்ற மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று (30.07.2020) திடீராய்வு செய்து பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வல்லமை கொண்ட, நம் முன்னோர்களால் வழிவழியாக கடைபிடிக்கப்பட்ட சித்தமருத்துவ முறைப்படி, 15 வகையான மூலிகைகளின் கலவையாக உருவாக்கப்பட்ட கபசுரக் குடிநீரை பொதுமக்களின் வீட்டிற்கே சென்று களப்பணியாளர்கள் மூலம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி 50 வீடுகளுக்கு ஒரு நபர் என்ற வகையில் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு யாருக்கேனும் சளி, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் உள்ளதா என்று களஆய்வு செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில், தமிழக அரசின் அறிவுரையின்படி தொற்று பாதிப்புள்ள பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான சிறப்பு மருத்துவ முகாம்கள் முழு வீச்சில் தினந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் 32 ஆரம்ப சுகாதாரநிலை மருத்துவர்குழுக்கள், 4 நடமாடும் மருத்துவக்குழுக்கள், 16 பள்ளி சிறார்கள் பரிசோதனை மருத்துவக்குழுவினர் மற்றும் 5 நகர ஆரம்ப சுகாதாரநிலை மருத்துவர்குழுக்கள் என 57 மருத்துவக்குழுவினர்கள் தொடர்ந்து மாவட்டம் முழுவதும் ஊரகப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறார்கள். ஒரு குழுவில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர், ஒரு மருந்தாளுநர் மற்றும் ஒரு உதவியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு முகாமில் சராசரியாக 70 முதல் 90 நபர்களுக்கு மருத்துவப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மருத்துவ முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் முன்னதாகவே, சிறப்பு முகாம் நடைபெறும் தகவலை பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் வீதி வீதியாக மைக் மூலம் அறிவித்து சுகாதாரத்துறையினரால் விழப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. இந்த சிறப்பு முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களில் சளி, காய்ச்சல், இருமல் உள்ளவர்கள், முச்சுவிட

சிரமப்படுபவர்கள், தூய்மைப்பணியாளர்கள், கர்ப்பினி பெண்கள், வயதில் மூத்த நபர்களுக்கு முக்கியத்தும் கொடுத்து பரிசோதனை நடத்தி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாது, இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மற்றும் சர்க்கரை நோயாளிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை இலவசமாக வழங்கி வருகிறார்கள்.

மருத்துவப்பரிசோதனை மட்டுமன்றி, அப்பகுதியில் தொற்று பாதித்த நபரின் வீடு இருப்பின் அவரது வீட்டைச் சுற்றிலும் உள்ள வீடுகளில் உள்ள நபர்களுக்கும், தொற்று பாதித்த நபர் பழக்கம் வைத்திருந்த நபர்களுக்கும் சளிமாதிரி பரிசோதனை எடுக்கப்படுகின்றது. இதனால், கொரோனா தொற்று ஏற்படுதல் கண்டறியப்பட்டு மேலும் பரவும் சூழல் வராமல் தடுக்கப்படுகின்றது.

பொதுமக்கள் யாருக்கேனும் சளி, இருமல், காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால் மருந்து கடைகளுக்குச் சென்று மாத்திரைகள் வாங்கி சாப்பிடாமல், அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்குச்சென்று மருத்துவரின் அறிவுரைகளைப்பெற வேண்டும். அப்போது தான் தொற்று நம் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்க முடியும். எனவே, பொதுமக்கள் சத்து மாத்திரைகளை அரசு மருத்துவ மனையில் பெற்று பயன் படுத்த வேண்டும். அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் கொண்ட உணவுப்பழக்கங்களை பின்பற்ற வேண்டும். முருங்கை கீரை, ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லிக்காய்கள் உள்ளிட்டவைகளை உட்கொள்ளலாம்.

மருத்துவர்கள, அரசுத்துறை அலுவர்கள் 24 மணிநேரமும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியில் ஈடுபட்டு தொற்று பரவலை தடுக்க பாடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் சமுதாயப்பொறுப்பை உணர்ந்து அரசு விதிமுறைகளைக் கடைபிடித்து சமூக விலகலை கடைபிடித்து, முககவசம் அணிந்து, அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவி தங்களையும் காத்து சமுதாயத்தையும் காக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மருத்துவப்பரிசோதனைக்கு வந்திருந்த பொதுமக்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கக்கூடிய கபசுரக்குடிநீரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தனித்துணை ஆட்சியர் (சமூகப்பாதுகாப்புத் திட்டம்) திருமதி.ந.ரசிக்கலா, மண்மங்கலம் வட்டாட்சியர் திரு.கண்ணன், சுகாதாரத்துறை அலுவலர் திரு.விஜயகுமார் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.